[1979 பிப்ரவரி 23

நிச்சயிக்கப்பட்ட தொகைக்கு மேல் அதிகமாக வசூலாகிவிடுகிறது. 31—3—1979 முடியும் நேரத்தில் இலக்குத் தொகை 37.25 கோடி ரூபாயைத் தாண்டி 50 கோடி ரூபாய் வரை செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையால், வற்புறுத்தலுக்கு அவசியம் இல்லை.

தஞ்சை மாவட்டக் கூட்டுறவு இணைப் பதிவாளர்.

*வினா எண். 139—

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளரைப் பற்றி அண்மையில் அரசுக்கு புகார் மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளர் மீது வந்த புகார் மனுக்களின் மீது கூடுதல் பதிவாளரால் விசாரணை செய்யப்பட்டு அவர்மீது இலாகா பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளரைப் பற்றி எந்தெந்த விதமான புகார்கள் வந்திருக்கின்றன? நிர்வாக சம்பந்தமான புகார்களாயிருந்தால் அத்தகைய புகார்கள் இனியும் ஏற்படாமல் இருப்பதற்கு மிகத் தீவிரமான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

[முற்பகல் 9—10]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை கூட்டுறவு இணைப்பதிவாளாரின் மீது வந்த புகார்கள் இரண்டு. ஒன்று அவர் தனது மகளின் திருமணத்தின் போது திருவேங்கடம் என்ற அந்த இணைப் பதிவாளா காவிரி சிறப்பங்காடியிலே ரூபாய் 1,016 வரை கடனுக்கு பொருள்களை வாங்கி அதனை ஐந்து தவணைகளிலே திருப்பிக் கொடுத்துள்ளார். மேலும், வாங்கப்பட்ட பொருள்களுக்கு இரண்டு சதவீதம் தள்ளுபடி செய்து பணம் கட்டியுள்ளார். இரண்டு சதவீதம் தள்ளுபடி என்பது காவிரி சிறப்பங்காடியில் உள்ள அங்கத்தினர்களுக்குத்தான் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், திருவேங்கடம் உறுப்பினராக அங்கே பதிவு செய்யவில்லை. இது ஒரு முறை கேடு.

1979 பிப்ரவரி 23]

இரண்டாவது முறைகேடு, நாகர்கோவிலில் உள்ள தனது மருமகனுக்கு பொருட்கள் அனுப்ப சிறப்பங்காடியின் டி. என். ஓ. 445 எண்ணுள்ள லாரியை உபயோகித்திருக்கிறார். ஒரு கிலோ மீட்டருக்கு 1 ரூபாய் வீதம் கொடுப்பதற்குப் பதில் கிலோ மீட்டருக்கு 60 பைசா வீதம்தான் அதுவும் 7 மாதங்களுக்குப் பிறகு சிறப்பங்காடியில் தொகையினைக் கட்டினார்.

மேற்கூறிய இரண்டு குற்றச்சாட்டுகளுக்காக பதிவாளர் தனது குறிப்பாணையின் மீது 4–5–78 இல் திருவேங்கடம் மீது குற்றச்சாட்டுக்கள் வரைந்து அவை பரிசீலனை செய்யப்பட்டு கூட்டுறவுத் துறையின் வாயிலாக 25–11–78ல் 6 மாத காலத்திற்கு திருவேங்கடம் அவர்களுக்கு இணைப்பதிவாளருக்கு ஊதிய உயர்வினை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். அவர் தஞ்சையிலிருந்து வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டு இப்போது செயல்பட்டு வருகிறார் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

நிலவள வங்கிகளில் உறுப்பினர் பங்குத்தொகை.

*வினா எண். 140—

திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலவள வங்கிகளிலிருந்து கடன் பெறும்போது சிறு விவசாயிகளிடமிருந்து பெறும் ஷேர் காபிடலின் சதவிகிதம் என்ன?

(ஆ) அதைக் குறைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், பொருளாதாரத்தில் பின்தங்கிய விவசாயிகள் ஆகியோரிடமிருந்து கடன் தொகையில் இரண்டு சதவிகிதம் முதல் ஆண்டிலும், அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டும் ஒரு சதவிகிதமும் ஆக நான்கு ஆண்டு காலத்தில் மொத்தம் ஐந்து சதவிகிதம் பங்குத் தொகையாக பெறப்படுகிறது.

(ஆ) இல்லை.

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, மிக சிறிய விவசாயிகள் விஷயத்தில் அதனை நீக்குகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளிலே தற்போது வசூலிக்கப்படும் பங்குத் தொகை, இந்திய ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு உட்பட்டது, அவர்களுடைய கட்டளை அது. எனவே, அதில் மாற்றம் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.